இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 05-10-2024

# புள்ளிவிபரங்களே புகழ்கின்றன!

**“நம்பர் ஒன் முதலமைச்சர் என்பதைவிட நம்பர் ஒன் தமிழ்நாடு என்று பெயர் வாங்குவதில்தான் எனக்கு மகிழ்ச்சி” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார்கள். இதோ இப்போது வந்து கொண்டிருக்கும் செய்திகள் அனைத்தும் ‘நம்பர் ஒன் தமிழ்நாடு’ என்பதை அறிவிப்பதாகவே அமைந்துள்ளன.**

சில வாரங்களுக்கு முன்னால் ஒன்றிய அரசின் ‘நிதி ஆயோக்’ அறிக்கை வெளியானது. அதனை மையமாக வைத்து ‘தி இந்து’ ஆங்கில நாளிதழும் கட்டுரை வெளியிட்டு இருந்தது. அனைத்து மனித வளக் குறியீட்டிலும் அகில இந்திய சராசரி எவ்வளவோ, அதைவிடக் கூடுதலாக தமிழ்நாடு இருக்கிறது என்பதை ‘தி இந்து’ வெளிப்படுத்தி இருந்தது.

**வறுமையின்மை - பட்டினி ஒழிப்பு - தரமான கல்வி - பாலின சமத்துவம் - தூய்மையான குடிநீர் - குறைந்த விலை - வேலைவாய்ப்பு - பொருளாதார குறியீடு - தொழில் - உள்கட்டமைப்பு - சம வாய்ப்புகள் - அமைதி - மருத்துவம் -மக்கள் நல்வாழ்வு - நுகர்வு - உற்பத்தி ஆகிய அனைத்து குறியீட்டிலும் தமிழ்நாடு மிகச் சிறந்து விளங்குவதாக ‘நிதி ஆயோக்’ அறிக்கை சொன்னது.**

வறுமையின்மையில் 92 விழுக்காடும், தூய்மையான குடிநீர் வழங்குவதில் 90 விழுக்காடும் பெற்றிருந்தோம். தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி வளர்த்தெடுத்து வருகிறார் என்பதற்கான சாட்சியங்கள் ஆகும். இந்தப் பட்டியலில் உத்தரகாண்ட் மாநிலம் முதலிடத்தைப் பெற்றது. கேரளா இரண்டாவது இடத்தையும், தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. 100க்கு 78 புள்ளிகளை தமிழ்நாடு பெற்றுள்ளது. இவை முன்னிலும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கான சாட்சியங்கள் ஆகும்.

இந்த நிலையில் நேற்றைய தினம் ஒரு புள்ளிவிபரம் வெளியாகி உள்ளது. இதனை வெளியிட்டது தமிழ்நாடு அரசு அல்ல. ஒன்றிய பா.ஜ.க. அரசின் புள்ளியியல் அமைச்சகம் ஆகும்.

தொழிற்சாலைகள் குறித்த ஆண்டு மதிப்பீட்டு அறிக்கை 2022-23ன்படி, ‘அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம்’ என்பதுதான் இந்த அறிக்கை கொடுத்திருக்கும் பட்டயம் ஆகும்.

ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஆண்டுதோறும் தொழிற்சாலைகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுவருகிறது. அந்தவகையில், 2022-23ஆம் நிதியாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கை வெளியாகி உள்ளது. அதன்படி அதிக நபர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிய முன்னணி மாநிலமாக தமிழ்நாடு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகுதான் மகாராஷ்டிரா, குஜராத், உ.பி., கர்நாடகா ஆகிய மாநிலங்கள் வருகின்றன. இந்த 5 மாநிலங்கள் தான் உற்பத்தி துறை சார்ந்த வேலைவாய்ப்பில் 55 விழுக்காடு பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவிலேயே அதிகம் பேருக்கு வேலை வாய்ப்புகளை அளித்ததன் மூலமாக, ‘வேலைகள் வழங்குவதிலும் முதல்வர்’ என்ற பெருமையை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெறுகிறார்கள். இந்தியாவுக்கு உற்பத்தி சார்ந்த வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் பாதிக்கு பாதி பங்களிப்பு வழங்கும் ஐந்து மாநிலங்களில் தமிழ்நாட்டையும் ஒன்றாக உயர்த்தி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

அனைத்துத் துறை வளர்ச்சி என்று தனது பார்வையை மிக விரிவானதாக ஆக்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதுதான் இத்தகைய வெற்றிக்கு காரணம் ஆகும். மற்ற மாநிலங்களில் சில குறிப்பிட்ட தொழில்கள் மட்டும் வளரும். அதுவும் நகரங்களைச் சுற்றி அதிகமாக அமைந்து கொண்டே போகும். அப்படி இல்லாமல் அனைத்து வகைப்பட்ட தொழில்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் தந்தார்கள். அனைத்து மாவட்டங்களுக்கும் பரவல் ஆக்கினார்கள்.

பெருந்தொழில்கள் மட்டுமல்ல; சிறுகுறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் தரும் அரசாகவும் மாற்றினார்கள். வேலை வாய்ப்புகளை அதிகளவு வழங்கக் கூடியவையாக சிறுகுறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைந்துள்ளன. சிறுசிறு தொழிலதிபர்களையும் இவை உருவாக்கியது.

இவற்றுக்கான மனித வளத்தை உருவாக்குவதிலும் முதலமைச்சர் அவர்கள் அக்கறை செலுத்தினார்கள். ‘நான் முதல்வன்’ என்ற திட்டத்தின் மூலமாக 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சியானது, பட்டதாரிகளாக மட்டுமல்ல; திறமைசாலிகளாகவும் இளைஞர்களை உருவாக்கி உள்ளது.

புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் ஆகிய திட்டங்களின் மூலமாக ஏராளமான மாணவ, மாணவியர் கல்லூரிச் சாலையை நோக்கி வருவதற்கான வாசலையும் திறந்து வைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். கல்லூரிகளில் 35 விழுக்காடு மாணவியர் சேர்க்கை அதிகரித்துள்ளது. இதன் மூலமாக மனித சக்தியையும் உருவாக்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். இவை அனைத்தும் எந்த மாநிலத்திலும் இல்லாதவை ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குச் சிந்தனையைப் பார்த்து நிறுவனங்கள் படையெடுத்து வருகின்றன. அதன் மூலமாக மாநிலமும் வளர்கிறது. வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. நிறுவனங்களின் தொடக்க விழாக்களில், ‘இதன் மூலமாக எத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கிறது’ என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறக்காமல் சொல்லி வருகிறார். அதிலும், பெண்கள் எவ்வளவு பேர் வேலைவாய்ப்பை பெறுகிறார்கள் என்பதையும் சொல்லி வருகிறார்.

**தொழில்கள் வருவதன் மூலமாக தொழில்கள் மட்டும் வளருவது இல்லை. அதன் மூலமாக கிடைக்கும் வேலைகள் மூலமாக குடும்பங்கள் வளருகிறது. சுற்றிலும் உள்ள மாவட்டமும், நகரமும், கிராமங்களும் வளர்கிறது. ஒட்டுமொத்த வளர்ச்சியாக தமிழ்நாட்டை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டிருப்பதைத்தான் இந்தப் புள்ளி விபரங்களே புகழ்கின்றன.**

# தருமபுரி - காவிரி உபரிநீர்த் திட்டம்; தமிழ்நாடு அரசு உறுதி!

## சட்டப்பூர்வமாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் !

**சென்னை, அக்.5-**

**தமிழ்நாட்டின் வேளாண் பெருமக்களின் நலன் பாதிக்கப்படாத வகையில் காவிரி ஆற்றில் கிடைக்கப்பெறும் உபரிநீரை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகளில் உள்ள ஏரிகளில் நிரப்புவதற்கான, தருமபுரி காவிரி உபரிநீர் திட்டத்தைச் செயல்படுத்திட, சட்டப்பூர்வமாக ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் - என்றும், இவ்வரசு பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்ட வேளாண் பெருமக்களுக்கு பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளும், திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும், தமிழ்நாடு அரசின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

தமிழ்நாட்டின் வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கவும், அவர்களுக்கு பல்வேறு புதிய திட்டங்களை வழங்கிடவும் தமிழ்நாடு அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, நீர்வளத் துறை, பட்டு வளர்ச்சித் துறை போன்ற துறைகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில், சிறுதானியங்கள் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் (உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் ஊட்டச்சத்து மிக்க சிறுதானியம்). உணவு மற்றும் ஊட்டச் சத்து பாதுகாப்பு இயக்கம் மக்காச் சோளம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் தரிசு நில மேம்பாடு திட்டம் மற்றும் திரவ உயிர் உரங்கள் விநியோகம் ஆகிய திட்டங்கள் 6.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 11.12 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு 57,808 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

பயறுவகைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 8.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 20,308 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடையவதற்காக 2.65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 10,312 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தருமபுரி மாவட்டத்தில் கடந்து மூன்று ஆண்டுகளில், பருத்தி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக திட்டங்கள் 22.66 இலட்சம் ரூபாய் நிதி செலவில் செயல்படுத்தப் பட்டு 1,128 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வரசு பொறுப்பெற்ற பின் 59,963 விவசாயிகளுக்கு 28.23 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தானியங்களில் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கு 4,448 தார்ப்பாய்கள் 36.86 இலட்சம் ரூபாய் செலவில் 4,448 விவசாயிகளுக்கும், நெற்பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு, 23.87 இலட்சம் ரூபாய் நிதி செலவில் 9,520 ஏக்கருக்கு துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் சுமார் 4,450 விவசாயிகளுக்கும் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 5,511 வேளாண் கருவி தொகுப்புகள் 75.46 இலட்சம் ரூபாய் நிதி செலவில் 5,511 சிறு, குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் பொது விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்திலும் வழங்கப் பட்டுள்ளது. அத்துடன், “பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி” திட்டத்தின்கீழ் இதுவரை, 59.41 கோடி ரூபாய், 99.025 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடி மானியமாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

அட்மா திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த 641 பயிற்சிகள், 146 கண்டுணர் பயணங்கள். 37 பண்ணைப் பள்ளிகள் மற்றும் 1,575 செயல் விளக்கத் திடல்கள் 1.51 கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்டு 26,300 விவசாயிகள் பயனடைந்து உள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 7.53 கோடி ரூபாய் நிதி செலவினத்தில், 158 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டதில் 1.89 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், “தமிழ் மண்வளம்” இணையதளம் வாயிலாக, புல எண் மற்றும் புவியிட குறியீடு கொண்டு, இதுவரை 1,605 மண்வள அட்டைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு விவசாயியும் தங்கள் நிலத்தின் மண்ணின் தன்மை, கார அமிலநிலை, சத்துக்களின் அளவு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

மேலும், வேளாண் காடுகள் திட்டத்தின்கீழ் 1.11 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த நிலையான பசுமைப் போர்வை இயக்கம் செயல்படுத்தப் பட்டு, 7.34 இலட்சம் மரக்கன்றுகள் விளைநிலங்களில் நடவு செய்யப் பட்டுள்ளன. வருங்காலங்களில் இப்பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப் பட்டு, நிலையான மழைநீர் பெற்றிட உதவிடும் என்பது உறுதி.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில், நுண்ணீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சிறு/ குறு விவசாயிகளுக்கு 100% மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 75% மானியத்திலும், சொட்டுநீர்ப்பாசனம், தெளிப்பான், மழைத்தூவுவான் போன்றவை 45.08 கோடி ரூபாய் நிதியில் 6,488 விவசாயிகளுக்கு 10,693 ஏக்கரில் நுண்ணீர் பாசனம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா) 435 மெட்ரிக் டன் நெல் விதைகளும் 498 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகளும் 489 மெட்ரிக் டன் பயறுவகை விதைகளும் 443 மெட்ரிக் டன் எண்ணெய்வித்து விதைகளும் 1,865 மெட்ரிக் டன் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில், தொகுப்பு அணுகுமுறை மூலம் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள, அங்ககச் சான்றிதழுடன் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க, 202324 ஆம் ஆண்டில் 67.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் 1000 ஏக்கர் பரப்பளவில் 20 அங்கக வேளாண்மைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு 502 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், 900 எண்கள் ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் 50 சதவீத மானியத்தில் 3.55 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தில், 767 எக்டரில் சிறுதானிய ங்கள், பருப்பு வகைகள் மற்றும் நிலக்கடலை பயிர்கள் 33.18 இலட்சம் ரூபாய் நிதி செலவினத்தில் 1,638 விவசாயிகளும், நெல்லுக்குப்பின் பயிர் சாகுபடி திட்டத்தில், 1,249 எக்டரில் உளுந்து பயிர் 12.33 இலட்சம் ரூபாய் நிதி செலவினத்தில் 1,002 விவசாயி களும் பயனடைந்துள்ளனர்.

2021-22-ஆம் ஆண்டில் 4,124 எக்டர் பரப்பளவில், மக்காச்சோளப் பயிரில், அமெரிக்கன் படைப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்திட, 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,200 விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், தென்னையில், வெள்ளை சுருள் ஈஜ கட்டுப்படுத்திட,

2021-22 ஆம் ஆண்டில், சுமார் 200 எக்டர் பரப்பளவில், 2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல், கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள், 200 விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு, தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில், 2.5 கோடி ரூபாய் நிதி செலவில் அரூர் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களும், 2.20 கோடி ரூபாய் நிதி செலவில் 5 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் கட்டப்பட்டுள்ளன, நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் 2,863 விவசாயிகளுக்கு 1.31 கோடி ரூபாய் இடுபொருள் மானியமாக வழங்கப்ப ட்டுள்ளதோடு, பல்வேறு உழவர் நலத்திட்டங்களில் 133.87 கோடி ரூபாய் நிதி செலவில் 3 இலட்சத்து 32 ஆயிரத்து 556 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் துவரை சாகுபடி பரப்பு விரிவாக்க இயக்கம் மற்றும் துவரை உற்பத்தி விரிவாக்க திட்டத்தின் மூலம் 15,181 எக்டேர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

### தருமபுரி காவிரி உபரிநீர் திட்டம்!

காவிரி ஆற்றில் கிடைக்கப்பெறும் உபரிநீரை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகளில் உள்ள ஏரிகளில் நிரப்புவதற்கான, தருமபுரி காவிரி உபரிநீர் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று விவசாயப் பெருமக்களிடமிருந்து பல ஆண்டுகளாக கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இந்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, பென்னாகரம் வட்டத்தில் உள்ள நெருப்பூர் அருகே, காவிரி உபரிநீரை எடுத்துப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு குறித்து நீர்வளத்து றை ஆராய்ந்து வருகின்றது.

காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில், காவிரி நதியின் உபரிநீரைப் பயன்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் குறித்து, பல்வேறு நிலைகளில் வழக்குகள் நிலுவையில் இருக்கக்கூடிய சூழ்நிலையில், தமிழ்நாட்டு வேளாண் பெருமக்களின் நலன் பாதிக்கப்படாத வகையில் இந்த கோரிக்கையைச் செயல்படுத்துவது குறித்து சட்டப்பூர்வமாக ஆராய்ந்து இதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு உறுதியாக எடுக்கும்.

## கே.வீ.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் தலைமையில்

# பெரிய நெகமம் பேரூர்க் கழகம் சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

## கே.ஈஸ்வரசாமி எம்.பி. துவக்கி வைத்தார்!

கோவை, அக். 5 -

கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு பெரிய நெகமம் பேரூர் கழகம் சார்பாக பெரிய நெகமம் ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வீ.கே.திருமண மண்டபத்தில் மாபெரும் மருந்தில்லா (அக்கு பிரஷர்) மருத்துவ முகாம் திராவிட மாடல் ஆட்சி நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆசியோடு வீட்டுவசதி துறை அமைச்சர் முத்துசாமி மற்றும் மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் செந்தில்பாலாஜி ஆதரவோடு கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆலோசனைப்படி, மாநில இளைஞரணி துணை செயலாளர் கே. இ.பிரகாஷ் எம்.பி. ஆதரவோடு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வீ.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் தலைமை வகித்தார்.

பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் சரவணகுமார் வரவேற்றார்.

பெரிய நெகமம் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி.ஆர்த்தி சபரி கார்த்திகேயன், பேரூர் கழக செயலாளர் ராசு (எ) முத்துக்குமார், பேரூர் கழக துணைச் செயலாளர் சந்துரு (எ) சந்தானகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சல்மான்கான், புவனேஷ், இருகூர் உதயபூபதி, சபரிகிருஷ்ணன் பேரூர் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர் மகேந்திரன், மெட் பார்மா நிருவனர்கள் ஜெயபிரகாஷ், ரஞ்சித், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியை கே.ஈஸ்வரசாமி எம்.பி. துவக்கி வைத்தார்.

பேரூர் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் சிவகார்த்திகேயன் நன்றி கூறினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் பெரிய நெகமம் பேரூர் கழக வார்டு செயலாளர்கள், வார்டு கவுன்சிலர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம் சின்ன செவலை ஊராட்சி கிராம சபை கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். மேலும் தூய்மை பணியாளர்களுக்கு பொன்னாடை அணிவித்தார், மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், ஊராட்சி மன்றத் தலைவர் மேகலா சதீஷ், ஒன்றிய குழு உறுப்பினர் ஏழுமலை, சின்ன செவலை கிளைக் கழக நிர்வாகிகள், விவசாய அணி சி.டி.பாலு, இளைஞர் அணி பாலாஜி, ராம்குமார், பழனி, நட்ராஜ், மகாலட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.